DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 209/2024** |
| Deposition of Witness for | : | PW 1 |
| Name | : | கவிதா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 14.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 14th **August 2025.**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் தையல் தொழில் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். 08.02.2006 ம் தேதி எனக்கும், எதிரி கருப்பசாமிக்கும் மாங்குடி மண்டபத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது 16 பவுன் நகையும், 20000 ரூபாய் ரொக்கமும் சீதனமாக கொடுக்கப்பட்டது. பண்டபாத்திரங்களும் கொடுத்தார்கள். 1ம் எதிரி என்னை பெண் கேட்டு நிச்சயித்து திருமணம் செய்தார். திருமணம் முடித்து மறுநாள் நாங்கள் திருப்பூர் சென்றுவிட்டோம். அங்கு சுமார் 6 மாதம் இருந்தோம். எனது கணவர் கருப்பசாமி அவருக்கு தொழில் வைத்துகொள்ளவேண்டி எனது அம்மாவிடம் கேட்டார். நான் எனது அம்மாவிடம் வந்து எனது கணவர் கருப்பசாமி தொழில் தொடங்குவதற்காக சீட்டு பணம் வேண்டி ரூ.100000 கொடுத்தேன். தையல் மெஷின் போட்டு தொழில் செய்து வந்தோம். அந்த தொழில் சரியாக

செய்யமுடியாததால் எனது கணவர் கரிவலம்வந்து ஆட்டோ பழகி 3 மாதம் கழித்து திருப்பூர் வந்துவிட்டார். அந்த சமயத்தில் எனக்கு 2007ம் வருடம் ஆண்குழந்தை பிறந்தது. அதன்பின்னர் 3 மாதம் கழித்து திருப்பூரில் தொழில் செய்ய முடியாததால் மாங்குடிக்கு அவரது அம்மாவை பார்ப்பதற்காக எனது கணவர் வந்தார். மாங்குடியிலிருந்து கேரளாவிற்கு சென்று துணி வியாபாரம் செய்யலாம் என்று சொல்லி எனது கணவர் என்னிடம் எனது நகைகளை கேட்டார். அதன்பின்னர் எங்களை திருப்பூர் கொண்டுபோய் விட்டுவிட்டு எனது கணவர் மட்டும் வியாபாரம் செய்வதற்காக கேரளாவிற்கு போய்விட்டார். அங்கு 6 மாதம் இருந்தார். அதன்பின்னர் திருப்பூர் வந்து என்னையும், எனது குழந்தையையும் எனது கணவர் கேரளாவிற்கு அழைத்து சென்றார். கேரளாவில் சுமார் 4 மாதம் இருந்தோம். கேரளாவில் வீட்டுவாடகை கட்டமுடியாததால் எனது கணவர் என்னை எனது அம்மாவீட்டிற்கு போக சொல்லிவிட்டு தொழில் செய்வதற்காக எனது 16 பவுன் நகையை வாங்கி வைத்துக்கொண்டு என்னை திருப்பூரில் உள்ள எனது அம்மா வீட்டிற்கு கொண்டுவிட்டுவிட்டார். கேரளாவிலிருந்து எனது கணவர் அடிக்கடி திருப்பூருக்கு வீட்டிற்கு வந்துசென்றுகொண்டிருந்தார். அந்த சமயத்தில் மாங்குடியில் பொங்கல் நடைபெற்றதால் மாங்குடிக்கு என்னையும், எனது குழந்தையையும் அழைத்து வந்தார். அப்போது மாங்குடியில் பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் எனது கணவரின் அத்தை மகள் அடிக்கடி மாங்குடி வீட்டிற்கு வந்து போய்கொண்டிருப்பதாக தகவல் சொன்னார்கள். எனது கணவரும் அந்த பெண்ணும் பேசிக்கொண்டிருப்பதாக சொன்னார்கள். அந்த விபரத்தை நான் என் கணவரிடம் கேட்டபோது என் கணவர் என்னிடம் அப்படி எந்த பெண்ணும் வரவில்லை, நீ திருபபூர் போய்விடு என்று சொன்னார். ஆனால் நான் என் கணவரிடம் நான் திருப்பூர் போகமாட்டேன் இங்கேதான் இருப்பேன் என்று சொல்லி தையல் மிஷின் வாங்கி மாங்குடியிலேயே இருந்தேன். சுமார் 4 மாதம் மாங்குடியில் இருந்தேன். எனது கணவர் மாங்குடியில் நான் இருந்த வீட்டிற்கு

வாரவாரம் வருவார். கேரளாவில் தொழில் செய்து வந்தார். கேரளாவிலிருந்து வீட்டிற்கு வரும்போது எனது கணவர் வீட்டிலிருக்காமல் அடிக்கடி ராயகிரி என்ற ஊருக்கு போய்விடுவார். எனது கணவரின் அக்கா வீட்டின் மாங்குடியில் புது வீடு கட்டி பால்காய்ச்சு வைத்திருந்தார்கள். அந்த நிகழ்ச்சிக்கு ராயகிரியில் உள்ள அந்த பெண்ணின் வீட்டிலிருந்து அனைவரையும் நிகழ்ச்சிக்கு அழைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த நிகழ்ச்சிக்கு முதல்நாள் எனது அம்மாவும் மாங்குடி ஊருக்கு வந்திருந்தார். எனது கணவர் பால்காய்ச்சும் நிகழ்ச்சிக்கு முதல் நாள் என்னிடம் சண்டைபோட்டு என்னையும், எனது அம்மாவையும் ஊருக்கு அனுப்பிவிட்டார். ஊரிலிருந்து பால்காய்ச்சுவதற்காக நீ வரவில்லையா என்று என்னிடம் கேட்டார்கள். ராயகிரியிலிருந்து அந்த பெண் வீட்டில் வந்திருப்பதாக கூறியதால் நான் உடனே திருப்பூரிலிருந்து கிழம்பி மாங்குடிக்கு வந்தேன். எனது கணவரின் அக்கா வீட்டில் எனது கணவரும், ராயகிரியை சேர்ந்த அந்த பெண்ணின் தம்பியும் தங்கையும் ஆகீயோர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். என்னை பார்த்து என் கணவர் நீ எதற்காக இங்கு வந்தாய் என்று சொல்லி சண்டை போட்டுவிட்டு எனது கணவர் போய்விட்டார். அன்று இரவு எனது கணவர் ஊருக்கு வராமல் ராயகிரி போய்விட்டார். அதற்கு மறுநாள் எனது கணவரின் அம்மா பாக்கியலட்சுமி என்னிடம் சண்டை போட்டுவிட்டு வெளியே போய்விட்டார். அப்போது எனது கணவர் வந்து என்னிடம் நல்லா பேசிக்கொண்டிருந்தார். என்னை சாப்பாடு வைத்துக்கொடுக்க சொன்னார். எனது கணவருக்கு தலை வலிப்பதாகவும், அதனால் மாத்திரை வாங்கிட்டுவர சொல்லி என்னை அனுப்பிவைத்தார். நான் வாங்கிவிட்டு வந்த பின்னர் என்னை ஜூஸ் வாங்கி வரச்சொன்னார். அதையும் நான் வாங்கி வந்தேன். அதன்பின்னர் சாப்பாடை என்னை சாப்பிடசொன்னார். நான் மாத்திரை விழுந்ததால் கசக்குது என்று சொல்லி சாப்பிட்டேன். தூங்கலாம் என்று சொல்லி படுத்தபோது எனது கழுத்தில் கயிறை போட்டு நெறித்து பேனில் தொங்கவிடுவதற்காக என்னை தூக்க பார்க்கிறார். நான் உணர்ச்சி இல்லாமல்

பார்க்கிறேன். எனது கணவரால் என்னை தூக்க முடியவில்லை. அக்கம்பக்கம் உள்ளவர்கள் கதவை தட்டி கேரளாவிலிருக்கும் தனது மகனுக்கு சோப்பு கொடுப்பதற்காக எதேச்சையாக வந்தவர்கள் கதவை தட்டிப்பார்த்து சிறிதுநேரம் கழித்து எனது கணவர் கதவை திறந்து எனது மனைவி தூக்கில் தொங்கினாள் நான் இறக்கி போட்டிருக்கிறேன் என்று சொல்லி அக்கம்பக்கம் உள்ளவர்களை அழைத்து காண்பித்தார். அருகில் இருந்தவர்கள் என்னை தளவாய்புரம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு நான் பிழைக்க மாட்டேன் என்று சொல்லி என்னை ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நான் உணர்ச்சி இல்லாமல் கிடந்தேன். எனது கணவர் சாப்பாட்டில் எதோ போட்டுவிட்டார். ராஜபாளையம் மருத்துவர் கேட்டபோது என் கணவர் மருத்துவரிடம் என் பொண்டாட்டி தூக்கில் தொங்கினார் நான் காப்பாற்றி கொண்டுவந்துவிட்டேன் என்று கூறினார். மருத்துவமனையில் வைத்து எனது கணவர் என்னிடம் நடந்த விபரம் எதையும் வெளியில் சொல்லக்கூடாது அப்படி சொன்னால் உன்னுடன் இருந்து வாழமாட்டேன் என்று சொல்லிவிட்டார். மறுநாள் எனக்கு மனநிலை சரியில்லாதவர் என்று மருத்துமவனையில் சர்டிபிகேட் வாங்குவதற்காக என்னை என் கணவர் அழைத்து சென்றார். அப்படி வாங்கினால் அப்படி சர்டிபிகேட் வாங்கினால் 2 வது திருமணம் செய்துகொள்ளலாம் அவ்வாறு செய்தார். மருத்துவமனையில் மருத்துவர் என்னிடம் என்னை பார்த்துவிட்டு நன்றாக இருப்பதாக கூறினார். அதன்பின்னர் நான் ராயகிரியில் உள்ள எனது மாமனார் குருசாமியை பார்ப்பதற்காக போனோம். எனது மாமனார் குருசாமியிடம் மனநிலை சரியில்லாததால் ரூ.50000 கொடுத்து எனது மாமனாரின் சகோதரியின் மகளை திருமணம் செய்யப்போவதாக எனது கணவர் கூறியதாக எனது மாமனார் என்னிடம் கூறினார். அதனால் நான் ஊர்க்கூட்டம் போட்டு பேசியபோது நகையை திருப்பி கொடுக்க வேண்டும், வீடு கொடுக்க வேண்டும் என்று பேசி முடித்தார்கள். எனது கணவர் தருகிறேன் என்று சொல்லிவிட்டு அன்று

அதிகாலை 4 மணிக்கு என்னை அந்த ஊரில் இருப்பதற்கு அவமானமாக இருப்பதாலும், திருப்பூர் போய்இருக்கலாம் என்று என்னை திருப்பூருக்கு அழைத்து சென்றார். திருப்பூரில் வந்து என்னையும், என் குழந்தையையும் விட்டு சென்ற எனது கணவர் திரும்ப வரவேயில்லை. போன் செய்தும் போனை எடுக்கவில்லை. மாங்குடியில் விசாரித்து பார்த்தோம். மாங்குடியில் வரவில்லை. அதன்பின்னர் நானும், எனது அப்பாவும் கேரளா சென்று விசாரித்தபோது அங்கும் எனது கணவரை கண்டுபிடிக்க முடியவில்லை. அதன்பின்னர் மாங்குடிக்கு வந்து விசாரித்து பார்த்துவிட்டு கரிவலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன்,. அன்று இரவு எனது கணவர் திருப்பூரிலிருந்து போன் செய்து திருப்பூருக்கு வரச் சொன்னார். நான் திருப்பூர் சென்று பார்த்தபோது திருப்பூருக்கு நாங்கள் போவதற்குள் எனது கணவர் திரும்பி போய்விட்டார். அதனபின்னர் நான் சங்கரன்கோவில் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.